DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-53/2025

Prosecution witness - PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.மாரிமுத்து | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A2 present)

05.02.2026- 03.45 PM

முதல் விசாரணை:-

1. நான் சிறைக்குளம் கிராமத்தில் குடியிருந்து இராமநாதபுரத்தில் உள்ள ஒரு பேக்கரியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1, 2 ஐத் தெரியும். பட்டியல் சாட்சி 4 வேல் என்பவரை தெரியும்.

2. சுமார் 29.07.2024 ம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் ஆஜர் எதிரிகள் இருவரும் அ.சா.1 ஐ எதிரியின் வீட்டிற்குள் வைத்து அடித்து விட்டார்கள். நான் சிறைக்குளம் சர்ச்சுக்கு பின்னால் உள்ள எதிரியின் வீட்டிலருகே அ.சா.1 முனியசாமியை பார்த்தேன். அப்போது என்னுடன் அ.சா.2 ஆறுமுகமும், பட்டியல் சாட்சி 2 வேல் இருந்தார்கள். அ.சா.1ன் உடம்பில் காயங்கள் இருந்தது. அ.சா.1 புகார் மனு எழுதி கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றுவிட்டார். இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் மறுநாள் என்னுடைய வீட்டில் வைத்து விசாரித்தார்கள். விசாரணை செய்யும் போது அ.சா.1 இருந்தாரா என்றால் அவர் மருத்துவமனையில் இருந்தார். சம்பவ தினத்தன்று வழக்கின் புகார்தாரர் முனியசாமி மற்றும் ஆறுமுகம், வேலை தவிர வேறு யாரையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 முனியசாமி என் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். புகாரை சம்பவத்திற்கு மறுநாள் கொடுத்தார்களா என்றால் இல்லை. சம்பவ தினத்தன்றே புகார் கொடுத்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும்

இடத்திற்கும் எங்கள் வீடு இருக்கும் இடத்திற்கும் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். அ.சா.1 ஐ எங்கள் காலனியில் வைத்து தான் பார்த்தேன் என்றால் சர்ச்சிலிருந்து வரும் வழியில் பார்த்தேன்.

3. அ.சா.1 எதிரிகளிடம் ரூ.50,000/- கடனாக வாங்கியது எனக்கு தெரியும். நீண்ட நாட்களாக எதிரிகள் எனது அண்ணனிடம் பணம் கேட்டுக்கொண்டிருந்தது எனக்கு தெரியும். வழக்கின் புகார்தாரர் எனது அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.05 21:24:20 +0530